இருக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதற்கான காரணங்கள் என்று அவர் சொன்னது பற்றிய விளக்கக்குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. 1965-லே வாங்கிய இயந்திரங்களுக்கு யார் பொறுப்பு என்று இப்போது 1982-லே கண்டுபிடிக்க ஆரம்பித்தால், அதற்காக ஆகும் செலவுத் தொகை, இயந்திரங்கள் வாங்குவதற்கு ஆன தொகைக்கு வந்து விடும். அப்போதே இதை ஆரம்பித்தால் நஷ்டம் வரும் என்று எண்ணி கைவிட்டு விட்டார்கள். இயந்திரங்கள் வாங்கியிருந்தாலும், அதனால் நஷ்டம் இல்லை. அந்த இயந்திரங்கள் வாங்கிய விலைக்கே விற்கப்பட்டு விட்டன.

### பெரிய தாளையிலுள்ள மீனவர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம்

* வினா எண் 402—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி பெரிய தாளையில் மீனவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கும் குடியிருப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது மின் இணைப்பு கொடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) மீனவர்களுக்கு இலவச வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் குடியிருப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு அமைக்க வழி வகைகள் கிடையாது. வீடுகளுக்கான மின் இணைப்பை குடியிருப்பவர்களே அவர்களது சொந்த செலவில் செய்து கொள்கின்றனர்.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, இந்த மீனவர் குடியிருப்பு கட்டப்பட்டு சுமார் 3 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் இந்த குடியிருப்புக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. நான் சென்ற ஆண்டு இந்தக் கேள்வியைக் கேட்டபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. இனிமேலாவது உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த குடியிருப்புப் பகுதிகளுக்கு தெருவிளக்கு போன்றவற்றிற்குத்தான் மின்சாரம் கொண்டுவர ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது மின்சாரத் துறையினர் முயற்சி செய்வார்கள். அந்தந்த குடியிருப்புகளுக்கு மின்சாரம் பெறுவதற்கு வீடுகளில் குடியிருப்பவர்கள்தான் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, அங்கே எக்சிகியூட்டிவ் எஞ்சினீயரை இதுசம்பந்தமாக சென்று பார்த்தோம். உடனடியாக சப்ளை தருகிறோம் என்று சொன்னார்கள். இதுவரையிலும் சப்ளை கிடைக்காத தால் தான் அரசை அணுகுகிறோம். ஆகையால் உடனடியாக இந்த குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த குடியிருப்புப் பகுதிகளுக்கு மின்சாரம் போகாமல் இருந்தால் அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து, அதில் இருக்கிற குறைகளை நீக்குவதற்கு வழி வகை இருக்கிறதா என்று பார்த்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். கூடியவரையில் எல்லா பகுதிகளுக்கும் மின்சாரத்தைக் கொண்டு சென்று தெருவிளக்கு வசதி செய்துதரவேண்டுமென்று முயற்சி செய்கிறோம், ஊராட்சி ஒன்றியங்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன, மின்சாரத் துறையும் முயற்சி செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்திற்கு என்ன காரணத்தால் மின்சாரம் செல்லவில்லை என்பதை ஆராய்ந்து அறிந்து, விரைவில் மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, மீன்பிடிப்பவர்கள் குடியிருக்கின்ற பகுதிகள் ஆனாலும் அல்லது பிற்பட்ட வகுப்பினர் குடியிருக்கும் பகுதிகள் ஆனாலும் அங்கே மின் இணைப்பு கொடுப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா ? அந்த நிலையை மாற்ற அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வேண்டுகோள்கள் பல்வேறு இடங்களிலிருந்து வருகின்றன. அதனுடைய அவசியம், அதனுடைய நியாயம், அதனுடைய தன்மைகளை ஒட்டி மின்சாரத் துறையினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சில குறிப்பிட்ட பகுதிகளில் மின் இணைப்பு கொடுப்பதற்காக வசதி வாய்ப்புகள் இருந்து, வேறு காரணங்களால் காலதாமதம் ஏற்படுமானால் அதைத் தவிர்க்க அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.